29.02.2024

O.S.No.221/2016

வா.சா.1 திரு. பிரான்சிஸ் பாஸ்டின் த.பெ.பிரான்சிஸ் இருதயராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**3**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. எனது சொந்த ஊர் மதுரை, நான் தற்போது சென்னையில் குடியிருக்கிறேன். தாவா சொத்தின் மொத்த விஸ்திரணம் 6 ஏக்கர் 7 செண்டு ஆகும். அந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கிருஷ்ணனும், நானும் அந்தோணிக்கு விற்பனை செய்து அந்தோணி இறந்த பின்பு ஜேசுராஜ் என்ற அன்பரசனுக்கு பாத்தியப்பட்டு, அவரிடம் இருந்து நான் மீண்டும் கிரையம் வாங்கினேன். ஜேசுராஜ் என்ற அன்பரசனுக்கு எவ்வாறு சொத்து பாத்தியப்பட்டது என்றால் அவரது சகோதரர் அந்தோணி எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் அவருக்கு பாத்தியப்பட்டு அவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். அந்தோணிக்கு, அன்பரசனை தவிர மற்றொரு உடன்பிறந்த சகோதரன் உண்டு என்றால் அதை பற்றி தெரியாது. எதற்காக 3ம் பிரதிவாதி அந்தோணி சாமியை நான் தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அடியாட்களை வைத்து தாவா சொத்தில் எனது அனுபவத்தினை இடையூறு செய்யும் வண்ணமாக மிரட்டியதால் அவரையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன். மேற்படி சங்கதியை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. இறந்து போன அந்தோணிக்கு உடன்பிறந்தவர்கள் 3 சகோதரிகளும் 2 சகோதரர்களும் உண்டு என்றால் போலியான ஆவணம் மூலமாக அதை தெரிந்து கொண்டேன். அந்த ஆவணத்தினை நான் தாக்கல் செய்யவில்லை, ஆனால் ராஜசேகரன் தாக்கல் செய்துள்ளார். 3ம் பிரதிவாதி அந்தோணி சாமி என்பவர் இறந்து போன் அந்தோணியின் மற்றொரு சகோதரரான திரவியம் என்பவரது மகன் என்பதால் அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்தோணி எழுதி வைத்த உயில் சொத்தில் அவரது சகோதரரான திரவியத்திற்கும் பங்கு என்பதால் திரவியத்தின் மகனையும் 3ம் பிரதிவாதியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். வடக்கே கிருஷ்ணன், தெற்கே PKM sons, மேற்கே தென்வடல் ரோடு, கிழக்கே தாயப்பன் இடம் உள்ளது. இறந்து போன அந்தோணிக்கு கண்பார்வை கிடையாது என்றால் அந்தோணியும் அவரது சகோதரர் அன்பரசனும் பகுதி பார்வையற்றவர்கள், இருவருமே கையெழுத்து செய்வார்கள், கடிதம் எழுதுவார்கள்.

3. கண்பார்வை தெரியாத அந்தோணி எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலின் அடிப்படையில் அன்பரசனுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி அன்பரசனுக்கும் கண்பார்வை தெரியாது என்பதால் அவரிடம் இருந்து சொத்தை மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அந்தோணி எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலும் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அன்பரசன் கண்பார்வை அற்றவர் என்பதால் நான் மோசடியாக கிரைய பத்திரம் எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்தோணி உடன்பிறந்த மற்ற சகோதர, சகோதரிகள் இருக்கும் போது அன்பரசன் ஒருவருக்கு மட்டும் உயில் எழுதி வைக்க வாய்ப்பில்லை என்றாலும், அந்த உயில் மோசடியான உயில் என்றாலும் சரியல்ல.